இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27-12-2024

# டங்ஸ்டன் கூடாது, கூடாது

மதுரை அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் கனிமச் சுரங்கத்தை அமைக்கக் கூடாது என்பதே தமிழ்நாடு அரசின் உறுதியான, இறுதியான, நிலையான நிலைப்பாடு ஆகும். ஒன்றிய பா.ஜ.க. அரசும், அதன் கொத்தடிமையான பழனிசாமியும் தவறான செய்திகளைப் பரப்புவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

மதுரை மாவட்டம் - மேலூர் வட்டம் - அரிட்டாபட்டி கிராமத்தில் டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைப்பதற்கு அனுமதியை ஹிந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்துக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்கியுள்ளது. இன்றியமையாத மற்றும் முக்கியக் கனிமங்களுக்கான உரிமங்களை மாநில அரசின் அனுமதி இன்றி ஒன்றிய அரசு ஏலம் விடக்கூடாது என்று தமிழ்நாடு அரசு 3.10.2023 அன்று ஒன்றிய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லி இருக்கிறது. இதனை மீறி ஏலம் விட்டுள்ளது பா.ஜ.க. அரசு. இந்த வட்டாரத்தைப் பல்லுயிர் பெருக்கத் தலமாக 2022ஆம் ஆண்டே தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இதனை மீறியும் ஏலம் விட்டது ஒன்றிய அரசு. இது கவனத்துக்கு வந்ததும், அனுமதிக்க மாட்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பிரதமருக்கு கடிதம் அனுப்பினார் முதலமைச்சர். டிசம்பர் 9 அன்று, தமிழ்நாடு சட்டமன்றத்தில் இத்திட்டத்தை அனுமதிக்க முடியாது என்றும் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டது.

**“ஒன்றிய அரசு இந்த விஷயத்தில் ஏலம் விட்டுவிட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றிய அரசு ஏலம் விட்டாலும், நிச்சயமாக, உறுதியாக இந்த அரசு அதற்குரிய அனுமதியைத் தருவதற்கான வாய்ப்பே கிடையாது. அதிலே திட்டவட்டமாக இருக்கிறோம். இதுதான் முடிவு. நான் முதலமைச்சராக இருக்கிற வரையில் நிச்சயமாக ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர முடியாது. வந்தால் அதைத் தடுத்தே தீருவோம். மீறிக் கொண்டு வந்தால் இந்தப் பொறுப்பில் நான் இருக்க மாட்டேன்; முதலமைச்சர் பொறுப்பில் இருக்க மாட்டேன்” என்கிற அளவுக்கு மிகமிகத் தெளிவாக, துணிச்சலாக சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.**

ஆனால் இன்று வரை ஒன்றிய பா.ஜ.க. அரசு போக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது. டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமையவுள்ள இடத்தை மறு ஆய்வுக்கு உட்படுத்துமாறு இந்திய புவியியல் ஆய்வு மையத்தை ஒன்றிய சுரங்கத் துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளதாகச் செய்தி வெளியாகி உள்ளது.

நாம் கேட்டது முழுத் தடை. ஆனால் அவர்கள் செய்ய நினைப்பது, இடத்தை குறைத்துக் கொள்வது ஆகும். “பல்லுயிரித் தலம் நீங்கலாக மற்ற இடங்களில் சுரங்கம் அமைக்கும் சாத்தியக்கூறுகளை மறுவரையறை செய்து திட்டத்தை மறு ஆய்வு செய்யுங்கள்” என்றுதான் ஒன்றிய அரசு சொல்லி இருக்கிறது.

“இத்திட்டமே கூடாது” என்பதுதான் தமிழ்நாடு சட்டமன்றத் தீர்மானம் ஆகும். தமிழ்நாடு அரசின் நிலைப்பாடும் அதுதான். போராடும் மக்களின் கோரிக்கையும் இதுதான். ஆனால் ஒன்றிய அரசு, ‘பல்லுயிரித் தலம் நீங்கலாக உள்ள இடத்தை தோண்டலாம்’ என்பது, ‘திட்டம் தொடங்கப்படும்’ என்பதே ஆகும். இதனை மறைக்க தமிழ்நாடு அரசாங்கத்தைக் குறை சொல்கிறது ஒன்றிய அரசு.

தமிழ்நாடு அரசு முன்னர் முறையான எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு பொய் சொல்கிறது. தமிழ்நாடு அரசு 3.10.2023 அன்று அனுப்பிய கடிதத்தில் மிகத் தெளிவாக இருக்கிறது. இதனை நீர்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் தெளிவுபடுத்தி இருக்கிறார். மாநிலத்தில் உள்ள முக்கியக் கனிமங்களை ஏலம் விடும் அதிகாரம் மாநில அரசுக்கு மட்டுமே உண்டு என்று அந்தக் கடிதத்தில் இருக்கிறது. இதற்கு என்ன பொருள் என்றால், ‘ஒன்றிய அரசு ஏலம் விட முடியாது, உங்களுக்கு அதிகாரம் இல்லை, அதிகாரம் இல்லாத இடத்தில் நீங்கள் எப்படி ஏலம் விடலாம்?’ என்ற கேள்விகள் இதனுள் அடங்கி இருக்கின்றன.

சுரங்கம் மற்றும் கனிமங்கள் தொடர்பாக 2023 ஆகஸ்ட் 17 முதல் புதிய சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது. முக்கியக் கனிமங்களை ஏலம் விடும் அதிகாரம் மாநில அரசுகளிடம் இருந்து ஒன்றிய அரசுக்கு மாற்றப்பட்டது. இதனைத்தான் தமிழ்நாடு அரசின், 3.10.2023 தேதியிட்ட கடிதம் கடுமையாக எதிர்க்கிறது. சட்டத்தை எதிர்த்தாலே திட்டத்தை எதிர்ப்பதாகத்தானே பொருள்? இதுகூட பழனிசாமிக்குப் புரியவில்லை.

சில பகுதிகளை விட்டுவிட்டு, இந்தத் திட்டத்தை அமல்படுத்தப் போகிறோம் - என்று சொல்லும் ஒன்றிய அரசை எதிர்க்கும் துணிச்சல் ‘மண்புழு’ பழனிசாமிக்கு இல்லை. தனது கொத்தடிமைக் கையாலாகாத்தனத்தை மறைக்க மறுபடி மறுபடி தமிழ்நாடு அரசைக் குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

**‘திட்டத்தையே முழுமையாக நிறுத்தி வையுங்கள் என்ற தமிழ்நாடு அரசின் தீர்மானத்தை நிறைவேற்றுங்கள்’ என்று ஒன்றிய அரசிடம் சொல்லும் துணிச்சல் இன்னமும் அவருக்கு ஏன் இல்லை? இதனைத்தான், ‘கள்ளக் கூட்டணி’ என்கிறோம்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மதுரை மாவட்டம் - அழகர்கோவில், கள்ளழகர் திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம் - மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தையும், பழனி - தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தையும் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அழகர்கோவில் - கள்ளழகர், மருதமலை - சுப்பிரமணிய சுவாமி

# திருக்கோயில்களில் நாள் முழுதும் அன்னதானம் வழங்கும் திட்டம்!

## பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் மாணவர்களுக்கு மதிய உணவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச. 27-**

**அழகர்கோவில் - கள்ளழகர் திருக்கோயில், மருதமலை -சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் மற்றும் பழனி - தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் - ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மதுரை மாவட்டம் - அழகர்கோவில், கள்ளழகர் திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம் - மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தையும், பழனி - தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தையும் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், 2,363 திருக்கோயில்களில் குடமுழுக்கு, திருத்தேர்களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், புதிய கல்வி நிறுவனங்கள் தொடக்கம், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து இந்து சமய அறநிலையத்துறை வாயிலாக சீரிய முறையில் செயல்படுத்தி வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் விரிவாக்கம்**

திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டமானது ஸ்ரீரங்கம், அரங்கநாத சுவாமி திருக்கோயில், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், இந்த அரசு பொறுப்பேற்றபின், அத்திட்டத்தினை விரிவுப்படுத்திடும் வகையில் 16.09.2021 அன்று திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களிலும், 31.12.2022 அன்று இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை, அருணாசலேசுவரர் திருக்கோயில் மற்றும் மதுரை, மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களிலும், 22.01.2024 அன்று திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் பவானியம்மன் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்கள் என கூடுதலாக 9 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 11 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 760 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானமும் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 110 கோடி ரூபாய் செலவிடப்படுவதோடு, ஆண்டுதோறும் சுமார் 3 கோடியே 36 லட்சம் பக்தர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

திருக்கோயில்களில் தயாரிக்கப்படும் அன்னதானம் மற்றும் பிரசாதம் தரத்துடனும், சுகாதாரமான முறையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்திட இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையத்தால் வழங்கப்படும் உணவு தர பாதுகாப்புச் சான்றிதழை (BHOG) 523 திருக்கோயில்கள் பெற்று, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்பது சிறப்புக்குரியதாகும்.

நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தும் விதமாக, முதலமைச்சர் அவர்கள் நேற்று மதுரை மாவட்டம், அழகர்கோவில், கள்ளழகர் திருக்கோயில் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களில் இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

**பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம்**

பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் 2 பள்ளிகள் மற்றும் 4 கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியரில் பெரும்பான்மையோர் பழனியைச் சுற்றி அமைந்திருக்கும் கிராமங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் என்பதால் அவர்கள் வயிற்றுப் பசியுடன் கல்வி கற்கக் கூடாது என்ற உயரிய நோக்கத்துடன் முதலமைச்சர் அவர்கள் 16.11.2022 அன்று காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

2024 - 2025ஆம் நிதி யாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், “பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் காலை சிற்றுண்டி திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு இந்தாண்டு முதல் மதிய உணவும் வழங்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் ஒரு பள்ளி மற்றும் நான்கு கல்லூரிகளில் மதிய உணவு வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் தொடங்கி வைத்தார். இதன்மூலம் 5,775 மாணவ, மாணவியர் பயன்பெறுவர். கல்லூரிகளில் காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில் கட்டுப்பாட்டிலுள்ள கல்லூரிகளில் தான் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் ச. லட்சுமணன், பொ. ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக, மதுரை மாவட்டம், அழகர் கோவிலிலிருந்து வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும். கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலையிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும், திண்டுக்கல் மாவட்டம், பழனியிலிருந்து சார்-ஆட்சியர் எஸ். கிஷன் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் பங்கேற்றனர்.

### மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின்

# சரஸ்மேளா - மாபெரும் விற்பனைக் கண்காட்சி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – இன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 27 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள், மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் என பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதன் வாயிலாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச் சித் துறையானது கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் தங்களின் தயாரிப்புப் பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுகளுடன் இணைந்து ‘சரஸ்’ (SARAS) எனப்படும் விற்பனை கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (27.12.2024) மாலை 4.00 மணியளவில் சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் சரஸ் மேளா மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சியினை துவக்கி வைக்க உள்ளார்.

இந்தக் கண்காட்சியில், ஆந்திரா மாநிலத்தின் அழகிய மரச் சிற்பங்கள், கொண்டப்பள்ளி பொம்மைகள், குஜராத் மாநிலத்தின் கைத்தறி ஆடைகள், பீகார் மாநிலத்தின் மதுபாணி ஓவியங்கள், கேரள மாநிலத்தின் பாரம்பரிய உணவு வகைகள் மகாராஷ்ட்ரா மாநில கோண்ட் பழங்குடியினரின் வண்ண ஓவியங்கள் உள்ளிட்ட கலை நயம் மிகுந்த கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், நாச்சியார்கோவில் குத்து விளக்குகள், கடலூர் முந்திரிப் பருப்பு, தருமபுரி சிறுதானிய தின்பண்டங்கள், ஈரோடு தரை விரிப்புகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கன்னியாகுமரி வாழைநார் பொருட்கள், நாமக்கல் கொல்லி மலை அரபுளி காபித்தூள், கரூர் கைத்தறி துண்டுகள், சிவகங்கை பாரம்பரிய அரிசி வகைகள், திருவண்ணாமலை ஜவ்வாது மலை தேன், சிறுதானியங்கள், தூத்துக்குடி பனை பொருட்கள், பனை வெல்லம் (கருப்பட்டி), விழுப்புரம் சுடுமண் சிற்பங்கள், கோரைப் பொருட்கள், அலங்கார விளக்கு திரைகள், விருதுநகர் செட்டிநாடு புடவைகள், அரியலூர் முந்திரி பருப்பு, கோயமுத்தூர் மூலிகை சோப்புகள், திண்டுக்கல் சின்னாளப்பட்டி சேலைகள், திருச்சி செயற்கை ஆபரணங்கள், தேனி சானிடரி நாப்கின் மற்றும் திருநெல்வேலி அல்வா போன்ற பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

2024 டிசம்பர் 27ஆம் தேதி முதல் 2025 ஜனவரி 09ஆம் தேதி வரை நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் சரஸ் மேளாவில் உணவு அரங்குகள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், இலவசமாக வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற அம்சங்கள் நிறைந்துள்ளன. இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

இத்தகைய சிறப்புமிக்க சரஸ் மேளா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மாநில அளவிலான மாபெரும் விற்பனை கண்காட்சிக்கு பொது மக்கள் அனைவரும் வருகை தந்து, பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.